## தலைமைப் பெருநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், எழும்பூர், சென்னை –600 008.

முன்னிலை : திரு. N. கோதண்டராஜ், B.Sc., B.L.,
தலைமைப் பெருநகரக் குற்றவியல் நடுவர்,
எழும்பூர், சென்னை.

**2025 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாள் திங்கட்க்கிழமை**

**<u>தீர்ப்புரை</u>**

**(குவிமுச பிரிவு 355 ன் கீழ்)**

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | வழக்கின் வரிசை எண் | : | C.C. No.15069/2005<br>CNR No.TNCH0F-000213-2005 | |
| ஆ. | குற்றம் நடந்த தேதி / வருடம் | : | 11.12.1994-06.05.2002 | |
| இ. | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ள நாள் | : | 29.04.2002 | |
| ஈ. | குற்ற முறையிடுபவர் | : | **தமிழ்நாடு அரசுக்காக:**<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>பொருளாதார குற்றப்பிரிவு-II,<br>சென்னை-2.<br><br>**Cr.No.: 16/2002** | |
| உ. | எதிரிகளின் பெயர்கள் மற்றும் குடியிருப்பிடம் | : | 1. | P.Rajarathinam,<br>S/o.Palaniappan,<br>33, Nungambakkam High Road,<br>Chennai-34.<br>**(Split up C.C.No.3709/2011)** |
| | | | 2. | T.Palanivelu,<br>S/o.M.S.Thevanna,<br>29 A, Cathedral Garden Road,<br>Nungambakkam, Chennai-34. |
| | | | 3. | Salai Kadamamani,<br>S/o.Meichenthil Iniya Andavar,<br>B.28, Syndicate Residency,<br>Thomas Road, Chennai-17. |
| | | | 4. | N.Ponnuswamy,<br>S/o.Nachimuthu Gounder,<br>Ambika Layout, New Sidhapur,<br>Coimbatore. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 5. | S.Sukumar,<br>S/o.Sorna Ganapathy,<br>12, New Agraharam Street,<br>Ramanathapuram.<br>**(Died)** |
| | | | 6. | Rajan Issac,<br>S/o.P.M.Issac,<br>No.10, 2nd Avenue,<br>Sasthri Nagar, Adayar, Chennai. |
| | | | 7. | Kasim Razvi,<br>S/o.Umar,<br>174, Aringar Anna Nagar,<br>By Pass Road,<br>South Ukkadam, Coimbatore. |
| | | | 8. | V.Ganesh,<br>S/o.Velusamy,<br>29A, Cathedral Garden Road,<br>Nungambakkam, Chennai-34.<br>**(Died)** |
| | | | 9. | M.V.Ramachandran,<br>S/o.N.V.Viswanathan,<br>1C, Park Land Apartments,<br>No.2, Kamala Bai Street,<br>Chennai. |
| | | | 10. | V.Jayaraman,<br>S/o.Velusamy,<br>1/78, Eachaneri (Post),<br>Coimbatore-21. |
| அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் | | : | சிறப்பு அரசு குற்றவியல் வழக்கறிஞர் | |
| எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் | | : | M/s.J.Suresh, D.Dhanasekaran,<br>K.P.AnanthaKrishna, R.Baskar, | |

## <u>உத்தரவு</u>

திரு.அருணாச்சலம் செட்டியார் மற்றும் அவரது மனைவி திருமதி.உமையாள் ஆச்சி ஆகியோர் 08.06.1973 ம் தேதி Kodaikanal Hotels Limited மற்றும் Motor Finance and Gurantee Company ஆகிய பங்குதாரர் ஸ்தாபனங்களை தொடங்கினார்கள். இந்நிலையில் 10.09.1975 ம் தேதி M/s. Madras Motor Finance and Guarantee Company Limited நிறுவனம்

நிறுவன சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டது. நிறுவனத்தின் இயக்குநர்களாக திரு.சிவன்நாயர், திருமதி.உஷா நாயர், திரு.ஜெயராமன் மற்றும் திரு.பழனியப்பன் ஆகியோர் இருந்தார்கள். மேற்சொன்ன நிறுவனம் தொடங்கிய பின்னர் பங்குதாரர் ஸ்தாபனங்களை நிர்வாகம் செய்துவந்தது. இந்நிலையில் 1976 ம் வருடம் விமான விபத்தில் திரு.அருணாச்சலம் செட்டியார் மற்றும் திருமதி.உமையாள் ஆச்சி ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். திரு.சிவன்நாயர் தொடங்கிய நிறுவனங்களை திரு.P.ராஜரத்தினம் அவர்கள் 03.09.1994 ம் தேதி ஏற்படுத்திக்கொண்டுள்ள Memorandum of Understanding அடிப்படையில் எடுத்துக்கொண்டார். அதன்பிரகாரம் பின்வரும் நிறுவனங்களை P.Rajarathinam & Associates நிர்வாகம் செய்துவந்தது.

1. Madras Motor Finance and Guarantee Company Limited,
2. Sanathana Dharma Gurukulam Limited,
3. Udhaya Business Financiers Limited,
4. Kodaikanal Finances Limited,
5. Kodaikanal Leasing Limited,
6. Business Equipments Leasing Company Limited,
7. Apu Hite Purchase Limited,
8. Madras Motor Finance Staff Benefit Fund Limited,
9. Rural Dairy Development and Housing Finance Corporation Limited.
10. Rural Housing Development Company Limited.
11. Tiruveni Peernamanent Fund Limited,
12. Kodaikanal Hotels Limited,
13. Thiruveni Travels Limited,
14. The Pomndichery Credit and investment (P) Limited,
15. Mylapore Safe Deposit Locker Co., Limited,
16. Rural Business Development Co. Limited.

2) மேற்சொன்ன நிறுவனங்களை வாங்கியதற்காக Good Will தொகையாக ரூ.2 கோடி பணத்தை திரு.ராஜரத்தினம் அவர்கள் திரு.சிவன்நாயர் அவர்களுக்கு

கொடுக்க Memorandum of Understanding அடிப்படையில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் திரு.ராஜரத்தினம் அவர்கள் இவ்வழக்கில் உள்ள 2 முதல் 10 எதிரிகளை நிறுவனத்தின் இயக்குநர்களாக Nominate செய்துள்ளார். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 16 நிறுவனங்களை திரு.ராஜரத்தினம் அவர்கள் பெற்றுள்ளார். 16 நிறுவனங்களின் வைப்பீட்டு தொகைகள் ரூ.51.35 கோடி பணமாக இருந்துள்ளது. Good Will தொகையாக ரூ.2 கோடி பணத்தை திரு.சிவன்நாயர் அவர்களுக்கு கொடுத்துள்ளார். அதன்பின்னர் நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும், நிர்வாகங்களையும் திரு.ராஜரத்தினம் மற்றும் அவரை சேர்ந்தவர்கள் செய்துவந்துள்ளார்கள். அந்த அடிப்படையில் Madras Motors Finance and Guarantee Limited நிறுவனத்தில் ரூ.41 கோடி முதலீடு பெறப்பட்டிருந்த நிலையில் திரு.ராஜரத்தினம் அவர்கள் நிர்வாகத்தை பெற்றுள்ளார். திரு.ராஜரத்தினம் அவர்கள் நிர்வாகத்தை எடுத்த பின்னர் பொதுமக்களிடமிருந்து வைப்பீட்டு தொகையாக ரூ.28 கோடி வசூல் செய்துள்ளார். மேற்சொன்ன நிறுவனத்தில் பணம் முதலீடு செய்து ஏமாந்துவிட்டதாக **100** புகார்தாரர்கள் புகார் கொடுத்துள்ளார்கள், மொத்தம் ரூ.23,10,835/- அளவிற்கு முதலீடு செய்து ஏமாந்துபோய்விட்டதாக 100 **ந**பர்கள் புகார் கொடுத்துள்ளார்கள்.

3) இவ்வழக்கில் 1 முதல் 10 எதிரிகள் 2002, 2003 காலகட்டத்தில் 100 முதலீட்டாளர்களிடமிருந்து ரூ.23,10,835/- பணத்தை வைப்பீடாக பெற்று திருப்பிக்கொடுக்காமல் நம்பிக்கை மோசடி செய்துள்ளனர். 1வது எதிரி நிறுவனத்தை நிர்வாகம் செய்துவந்துள்ளார். 2 முதல் 10 எதிரிகள் Nominated இயக்குநர்களாக நிறுவனத்தின் பணத்தை கையாளும் பொறுப்பில் செயல்பட்டு முதலீட்டாளர்களுக்கு திருப்பி கொடுக்காமல் ஏமாற்றியுள்ளனர். ஆகவே, எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 409ன் கீழ் குற்றம் செய்துள்ளதாக பொருளாதார குற்றப்பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

4) அரசு தரப்பில் தாக்கல் செய்த பின்னர் வழக்கு 29.04.2002ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டது. இவ்வழக்கில் எதிரிகள் அனைவரையும் தலைமறைவு எதிரிகளாக காண்பித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் வழக்கு

கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு எதிராக பிடிக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1வது எதிரி தவிர மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி பிடிக்கட்டளையை இரத்து செய்து மனு தாக்கல் செய்ததின் அடிப்படையில் அவர்கள் மீதான பிடிக்கட்டளை இரத்து செய்யப்பட்டுள்ளது. 1வது எதிரி மட்டும் தொடர்ந்து ஆஜராகாமல் தலைமறைவாக இருந்துவருகிறார். வழக்கு விசாரணை காலத்தில் 5 மற்றும் 8 எதிரிகள் இறந்துபோன காரணத்தால் அவர்களின் மீதான குற்றங்கள் அற்றுப்போய்விட்டதாக உத்தரவிடப்பட்டுள்ளது. 1வது எதிரி தொடர்ந்து தலைமறைவாக இருந்த காரணத்தால் அவர்மீதான வழக்கு தனியாக பிரித்தெடுக்கப்பட்டு **C.C.No.3709/2011** எண் வழங்கப்பட்டுள்ளது. 1வது எதிரியின் மீதான வழக்கில் அரசு தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் தலைமறைவு குற்றவாளியாக விளம்புகை செய்யப்பட்டுள்ளார். 1வது எதிரியின் மீதான வழக்கு தனியாக நிலுவையில் இருந்து வருகிறது.

5) 2 முதல் 4, 6, 7, 9 மற்றும் 10 எதிரிகள் வழக்கில் ஆஜராகி வருகின்றனர். எதிரிகள் தரப்பில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு வந்த நிலையில் வழக்கு விசாரணை காலதாமதமாகி வந்தது. இந்நிலையில் எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த Company Application No.801/2006, 802/2006 in Company Petition Nos.73/2006 to 77/2006 வழக்கில் 21.07.2006ம் தேதி பிறப்பித்த உத்தரவில் முதலீட்டாளர்களுக்கு 50% பணத்தை திருப்பிக்கொடுக்க மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் பணம் திருப்பிக்கொடுக்கப்பட்டுவிட்டதாகவும், மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி பணம் திருப்பிக்கொடுக்கப்பட்டுள்ள நிலையில் முதலீட்டாளர்கள் சமாதானமாக சென்றுள்ளனர் எனவும், எனவே எதிரிகளின் மீதான வழக்கு முடிவுக்கு கொண்டுவரவேண்டும் எனவும் வாதம் முன்வைத்தார்கள்.

6) எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களின் வாதத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை சரிபார்ப்பதற்காக பொருளாதார குற்றப்பிரிவு துணை

கண்காணிப்பாளர் அவர்களின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் ஆவணங்களின் அடிப்படையில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளையும், அதன் அடிப்படையில் 50% பணம் முதலீட்டாளர்களுக்கு திருப்பி கொடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் நீதிமன்றத்தில் சமர்பித்தார்கள்.

7) பொருளாதார குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளர் திரு.அலெக்ஸாண்டர் அவர்களின் வாக்குமூலம் 07.04.2025ம் தேதி பதிவு செய்யப்பட்டது. பொருளாதார குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்களின் வாக்குமூலத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

**வாக்குமூலம்** :

"நான் தற்போது சென்னை பொருளாதார குற்றப்பிரிவு தலைமை அலுவலகத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணி செய்து வருகிறேன். பொருளாதார குற்றப்பிரிவு குற்ற எண்.132/1996, இ.த.ச. பிரிவுகள் 409 மற்றும் 409 உ/இ 34 வழக்கில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் C.C.No.11460/2002 என்ற எண்ணில் வழக்கு நிலுவையில் உள்ளது. இவ்வழக்கில் மொத்தம் 264 சாட்சிகள் பாதிக்கப்பட்டுள்ள நபர்களாக குற்ற அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கின் எதிரிகள் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Company Application Nos.801/2006, 802/2006 in Company Petition Nos.73/2006 to 77/2006 மனுவில் 21.07.2006 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவில் முதலீட்டாளர்களுக்கு 50% பணத்தை திருப்பிக்கொடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளது. மேற்சொன்ன உத்தரவில் 153 மற்றும் 154 வது பத்திகளில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

"153. The scheme summarises the effect of the scheme as follows:

In view of the above settlement, all the parties concerned shall also agree for the following:

The payment of Rs.34 crores shall constitute the full and final settlement of all claims by the deposit holders, secured and unsecured creditors in respect of all of them and without any further act or deed.

All sbsisting claims and all cases against the company, Directors and Promoters relatable to any deposit holders, bond holders and hundi holders creditors shall abate.

The lands belonging to the companies at Vadakuppatu, Senthamangalam, Bhadharvadi and Palur Villages in Tamil Nadu and presently under the use, control, occupation, possession, enjoyment, maintenance etc., of the Administrator shall stand discharged from the said obligation and vest with absolutely without any lien or attachment whatsoever with the sponsor companies.

No claims or other issues should be raised against the any of the group companies in the Group of their subsidiaries or their Directors, past and present, in respect of matters relating to the 22 companies.

It is also stated that the scheme on approval shall be binding on the petitioners and parties of the scheme.

154. Satisfied of the fairness of the scheme, this Court approves the scheme for revival of the operations of the company, thereby enabling the sponsor companies to run this educational academy and to make use of these lands for the purpose that they deem fit. The scheme of arrangement and compromise of the creditors which includes depositors is hereby sanctioned with a direction to the sponsor companies, the petitioner herein, in bring a sum of Rs.34 crores within a period of four weeks from the date of receipt of this order and file a report before this Court evidencing the amount deposited and steps taken for disbursement to the depositors as agreed under the scheme. The scheme is also sanctioned subject to the proceedings before the Civil and Criminal Courts with option to compoint the offence charged for"

மேற்சொன்ன உத்தரவின் அடிப்படையில் பணம் கொடுக்கப்பட்டுவிட்டதா என்பது குறித்து 6 மாதத்தில் அறிக்கை தாக்கல் செய்யும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு 19.12.2006 ஆம் தேதி மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. 21.07.2006 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் பணம் கொடுக்கப்பட்டுவிட்டதாக Full Satisfaction Report தாக்கல் செய்ததை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு 19.12.2006 ஆம் தேதி உத்தரவு பிறப்பித்தது. மேற்சொன்ன உத்தரவை எதிர்த்து பொருளாதார குற்றப்பிரிவு சார்பாக தாக்கல் செய்த O.S.A. S.R.Nos.66542 to 66546 of 2007 மனுக்களை தள்ளுபடி செய்து Company Petition Nos.73 to 77/2006 மனுக்களில் பிறப்பித்த உத்தரவை இரு நீதிபதிகள் அமர்வு 19.01.2008 ஆம் தேதி உறுதி செய்தது. மேற்சொன்ன உத்தரவுகளை சுட்டி காண்பித்து இவ்வழக்கில் கண்டுள்ள சாட்சிகளுக்கு பணம் கொடுக்கப்பட்டுவிட்டதாகவும், யாருக்காவது கொடுக்காமல் விடுபட்டிருந்தால் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி கொடுத்துவிடுவதாகவும் எதிரிகள் தரப்பில் சொன்னதன் அடிப்படையில் வழக்கு மக்கள் நீதிமன்றத்திற்கு சமாதானம் பேசுவதற்காக அனுப்பப்பட்டது. அதனடிப்படையில் பணம் கொடுக்கப்பட்டுவிட்டதா என்பதை கண்டறிவதற்காக பொருளாதார குற்றப்பிரிவு அலுவலக அதிகாரிகள் சாட்சிகளை நேரடியாக சென்று பார்த்து 22 சாட்சிகளிடம் விசாரித்தபோது 3 நபர்கள் 50% பணத்தை பெற்றுக்கொண்டதாக தெரிவித்தார்கள், மற்ற 19 சாட்சிகளின் முகவரிகளில் அவர்கள் இல்லை. எனவே, இதுகுறித்து 14.12.2024 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தேன். மற்ற சாட்சிகளிடமும் விசாரிக்கவேண்டும் என்ற அடிப்படையில் இவ்வழக்கில் கண்டுள்ள அனைத்து பாதிக்கப்பட்டுள்ள சாட்சிகளிடமும் அறிவிப்பு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஏற்கனவே விசாரித்த 22 சாட்சிகள் தவிர மற்ற 249 சாட்சிகளுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்சொன்ன அறிவிப்புகள் துரித தபால் மூலம் அனுப்பப்பட்டது. அவ்வாறு அறிவிப்பு அனுப்பியதில் 14 நபர்கள் பணம் பெற்றுக்கொண்டுவிட்டதாக தெரிவித்தார்கள், 5 நபர்கள் பணம் வாங்கவில்லை என்று தெரிவித்தார்கள், 17 சாட்சிகள் இறந்துவிட்டதாக அறிவிப்பு திரும்பி வந்தது, 185 நபர்கள் முகவரியில் இல்லை என்று அறிவிப்பு திரும்ப வந்தது. 28 சாட்சிகள் அறிவிப்பை பெற்றுக்கொண்டார்கள், ஆனால்

அவர்கள் பதில் ஏதும் கொடுக்கவில்லை. 5 நபர்கள் பணம் வாங்கவில்லை சொல்லியிருந்த நிலையில் 2 நபர்கள் எதிரிகளிடம் அசல் இரசீதுகளை கொடுத்து அவர்களுக்குரிய பணத்தை அவர்களது வங்கிக் கணக்குகள் மூலம் பெற்றுக்கொண்டார்கள். மீதமிருந்த 3 நபர்கள் பணத்தை பெற்றுக்கொள்ள வருமாறு அழைத்த பின்னரும் பணத்தை பெற்றுக்கொள்ள வரவில்லை. அவர்களை மீண்டும் தொடர்புகொள்ள முயற்சித்தும் அவர்கள் கைபேசியை எடுக்கவில்லை, அவர்கள் ஏற்கனவே தங்களிடம் அசல் முதலீட்டு இரசீதுகள் இல்லை என்று தெரிவித்திருந்தார்கள். இதுதொடர்பாக 23.01.2025 மற்றும் 20.02.2025 ஆகிய தேதிகளில் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

பொருளாதார குற்றப்பிரிவு குற்ற எண்.16/2002, இ.த.ச. பிரிவுகள் 420, 409 வழக்கில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு C.C.No.15069/2005 என்ற எண்ணில் நிலுவையில் உள்ளது. மேற்சொன்ன வழக்கில் மொத்தம் 100 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ள சாட்சிகளாக உள்ளார்கள். மேற்சொன்ன வழக்கிலும் மாண்புமிகு உயர் நீதிமன்ற உத்தரவுப்படி பணம் கொடுக்கப்பட்டுவிட்டதா என்பது குறித்து அறிந்துகொள்ள விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு அறிவிப்பு அனுப்பி விசாரணை செய்ததில் 53 நபர்கள் முகவரியில் இல்லை, 10 நபர்கள் இறந்துவிட்டார்கள், 19 நபர்கள் 50% பணம் வாங்கிவிட்டதாக தெரிவித்தார்கள், 15 நபர்கள் அறிவிப்பை பெற்றுக்கொண்டார்கள், ஆனால் பதில் ஏதும் தெரிவிக்கவில்லை. 3 நபர்கள் பணம் பெறவில்லை என தெரிவித்தார்கள், ஆனால் அவர்களை மீண்டும் தொடர்புகொண்டபோது தொடர்புகொள்ள இயலவில்லை.

இவ்வழக்கில் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி பணத்தை சாட்சிகள் எவரும் எதிர்காலத்தில் கேட்கும்பட்சத்தில் அவர்களுக்குரிய பணத்தை திருப்பி கொடுக்க இந்நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்"

8) மேற்சொன்ன வாக்குமூலத்தை பரிசீலித்தால் Company Application No.801/2006, 802/2006 in Company Petition Nos.73/2006 முதல் 77/2006 மனுக்களில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் 21.07.2006 ம் தேதி பிறப்பித்த உத்தரவில் Madras Motors Finance and Guarantee Limited நிறுவனத்தில் முதலீடு செய்த நபர்களுக்கும், Associates நிறுவனங்களில் முதலீடு செய்த நபர்களுக்கும் 50% பணத்தை திருப்பி கொடுக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது என்பதையும், அதற்காக ரூ.34 கோடி பணத்தை வைப்பீடு செய்வதற்கு உத்தரவிட்டுள்ளது என்பதையும் அறிந்துகொள்ளமுடிகிறது. மேலும், வைப்பிடு செய்த பின்னர் முதலீட்டாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளபடி 50% பணத்தை திருப்பிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், பணம் திருப்பி கொடுத்த பின்னர் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை சமாதானமாக முடிப்பதற்கு வழிவகை உள்ளது எனவும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் சொல்லப்பட்டுள்ளது.

9) மேற்சொன்ன உத்தரவின் அடிப்படையில் பணம் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டு முதலீட்டாளர்களுக்கு திருப்பி கொடுக்கப்பட்டுவிட்டதாக Full Satisfaction Memo முதலீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்ததின் அடிப்படையில் 19.12.2006 ம் தேதி மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

10) மேற்சொன்ன உத்தரவின்படி 50% பணம் மட்டுமே திருப்பிக்கொடுக்கப்பட்டுள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொருளாதார குற்றப்பிரிவு காவல்துறை சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள O.S.A. SR.Nos.66542 to 66546 of 2007 மனுக்களை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் இரு நீதிபதிகள் அமர்வு 19.01.2008 ம் தேதி தள்ளுபடி செய்துள்ளது. ஏற்கனவே Company Petition No.73 to 77/2006 மனுக்களில் 50% பணத்தை திருப்பிக்கொடுக்க பிறப்பித்த உத்தரவு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

11) மேற்சொன்ன உத்தரவுகளின் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சிகளாக உள்ள முதலீட்டாளர்களுக்கு 50% பணம் திருப்பிக்கொடுக்கப்பட்டுவிட்டதா என்பதை

கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பொருளாதார குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்கள் அனைத்து சாட்சிகளிடமும் Verify செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். பதிவு தபால் மூலம் அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது. அந்த வகையில் 19 நபர்கள் 50% பணத்தை பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். 10 நபர்கள் இறந்துபோயுள்ளார்கள். மற்ற சாட்சிகள் முகவரியில் இல்லாத காரணத்தால் விசாரிக்க இயலவில்லை என்று துணை கண்காணிப்பாளர் அவர்களின் வாக்கமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். துணை கண்காணிப்பாளர் அவர்களின் விசாரணையில் தொடர்புகொள்ள முடிந்த சாட்சிகளை பொறுத்தளவில் பெரும்பாலான சாட்சிகள் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி 50% முதலீட்டு பணத்தை திரும்ப பெற்றுக்கொண்டுள்ளார்கள். முதலீட்டாளர்கள் கூட்டமைப்பு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டதின் அடிப்படையில் Scheme Form செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பணம் திருப்பி கொடுக்கப்பட்டுள்ளது. முதலீட்டாளர்கள் கூட்டமைப்பு Full Satisfaction Report தாக்கல் செய்ததை மாண்புமிகு உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு 19.12.2006 ம் தேதி உத்தரவு பிறப்பித்துள்ளது. இவ்வழக்கில் கண்டுள்ள சாட்சிகள் பெரும்பாலானோர் பணம் பெற்றுக்கொண்டுள்ளனர். மாண்புமிகு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து பொருளாதார குற்றப்பிரிவு தாக்கல் செய்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் கண்டுள்ள சாட்சிகள் எவராவது அசல் வைப்பீடு இரசீதுகளை வைத்துக்கொண்டு பணம் பெறாமல் இருந்தால் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி பணத்தை திருப்பிக்கொடுக்க சம்மதம் தெரிவித்து எதிரிகள் அனைவரும் பிரமாண வாக்குமூலங்கள் தாக்கல் செய்துள்ளார்கள். பொருளாதார குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்களும் சாட்சிகள் எவராவது எதிர்காலத்தில் பணம் கோரும்பட்சத்தில் அவர்களுக்குரிய பணத்தை திருப்பிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுள்ளார். அரசு தரப்பு வேண்டுகோளின்படி பணத்தை திருப்பிக்கொடுக்க சம்மதம் என எதிரிகள் பிரமாண வாக்குமூலங்கள் தாக்கல் செய்துள்ளார்கள். மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி பணம் திருப்பிக்கொடுக்கப்பட்டால் குற்றவியல் வழக்குகளை சமாதானமாக முடித்துக்கொள்ளலாம் என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் 21.07.2006 ம் தேதி

பிறப்பித்த உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளது. மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி பணம் கொடுக்கப்பட்டுவிட்டதாக Full Satisfaction Report தாக்கல் செய்துள்ளதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வழக்கில் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 409 ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டப்பிரிவின் கீழான குற்றம் நீதிமன்ற அனுமதியுடன் சமாதானமாக செல்லக்கூடிய குற்றமாகும். M/s. Madras Motors Finance and Guarantee Company நிறுவனத்தின் முதலீட்டாளர்களும், Associates நிறுவனங்களின் முதலீட்டாளர்களும் Full Satisfaction Report மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள். பாதிக்கப்பட்டுள்ள நபர்கள் சமாதான திட்டத்தை ஏற்றுக்கொண்டு அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி வழக்கை சமாதானமாக முடிப்பது சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எவராவது பணம் பெறாமல் இருந்தால் அசல் வைப்பீடு இரசீதுகளை சமர்பிக்கும்பட்சத்தில் பணத்தை திருப்பிக்கொடுக்க சம்மதம் தெரிவித்து எதிரிகள் அனைவரும் பிரமாண வாக்குமூலங்கள் தாக்கல் செய்துள்ளார்கள். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வழக்கு நிலுவையில் உள்ளது. மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி முதலீட்டளார்கள் பணம் பெற்றுக்கொண்டு அறிக்கையில் தாக்கல் செய்துள்ளார்கள்.

ஆகவே, கு.வி.மு.ச. பிரிவு 320(8) ன் கீழ் வழக்கை முடித்துவைத்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. இவ்வழக்கின் சாட்சிகள் எவராவது இதுவரை பணம் பெறாமல் இருக்கும்பட்சத்தில் அசல் வைப்பீட்டு இரசீதுகளை ஒப்படைத்தால் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி 50% பணத்தை எதிரிகள் வழங்கவேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

//இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாகக் கணினியில், தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் திங்கட்க்கிழமையான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது//

N KOTHANDARAJ Digitally signed by N KOTHANDARAJ

தலைமைப் பெருநகர குற்றவியல் நடுவர்,
எழும்பூர், சென்னை–8.